ரிஜிஸ்டர் நெ. M. 4870. ஆண்டு கட்டணம் ரூ. 4—8—0 தனிப்பிரதி 0—1—3

திராவிடன்

தமிழ் வார வெளியீடு. ஆசிரியர்: N.V.நடராசன்.

மாலை 1 சென்னை 2—11—1947 ஞாயிறு மலர் 12

பறிகொடுத்தோமே, மனம் பாதவித்தோமே!

தலைப்பைக் கண்டவுடன், பண்டித மோதிலாலைப்பற்றி, இதைத் தீட்டியவருக்குத திடீரென நினைவு வந்துவிட்டதோ என நேயர்கள் கருதக்கூடாது.

சில நாட்களுக்கு முன் நம் மாகாணத்தின் தன்மானம் பறிபோன சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இவ்விதம் நடைபெறுவது புதிதல்ல என்றாலும், இன்றைய நிலையிலும் அத்தன்மை மாறாதிருப்பதைக் காணும் காங்கிரசிலுள்ள முற்போக்குத் தோழர்களும், நாட்டின் நலன் கருதுவோரும், குறிப்பாக திராவிடர் கழகத்தினரும், மனம் பாதவிக்காமலிருக்க முடியாது.

"ஜமீன்தாரிசமும், அத்துடன் இனாம் மானியம் என்று கூறப்படும் அநியாய ஆதிக்கமும் சேர்த்து ஒழிக்கப்பட வேண்டும்" என்பது எல்லா அரசியல் கட்சியினருடைய நீண்டகால கிளர்ச்சியும் வேண்டுகோளுமாகு மென்பதை நண்பர்கள் அறிவர். இன்று இதற்காக ஏழை விவசாயத் தொழிலாளர் முதல், நாட்டின் எதிர்கால நலனில் அக்கரையுடைய அனைவரின் ஒருமித்த ஆதரவுமிருந்து வருகிறது.

அதுமட்டுமல்ல, ஜமீன்தாரிசம் ஒழிக்கப்படுவதைப்பற்றி ஜமீன்தாரர்களும் ஒப்புக்கொண்டு, ஆனால் அதற்கான நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டுமென்று வாதாடியதின் காரணமாக 10 கோடி ரூபாய் கொடுப்பதென்றும் மந்திரி சபையினர் முடிவு செய்திருந்தனர். இவ்வளவு அதிகத் தொகை கொடுப்பது அடாத செய்கையாகும், ஏழைகள் வரிப் பணத்திலிருந்து, இதுவரை பரம்பரை பாத்தியமாக அனுபவித்து தங்களின் எதிர்கால உல்லாச வாழ்வுக்கும் ஆக்கந் தேடிக்கொண்டவர்களுக்கு 10 கோடி ரூபாய் கொடுப்பது ஏன்? என்ற முழக்கம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இன்று முழங்கப்படுகின்றது.

ஜமீன்தாரர்களும் அவர்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேசவந்த சில வக்கீல்களும் சட்டத்தை எந்தெந்த விதமாகவோ புரட்டி வாதாடினர்.

இனாம்தாரிகள் எனப்படுவோர் அத்தனைபேரும், நூற்றுக்கு 99 பேர்வரை ஆரியர்களே யாகும். இவர்கள் அந்நாட்களில் நமது முன்னோர்களிடமும், அரசியலாரிடமும் தங்களின், வீரத்தையோ, உழைப்பையோ, நேர்மையான பணியையோ, நீதியையோ, அறிவுக்கு ஏற்றதான காரணங்களையோ அடிப்படையாக வைத்து இவ்வுரிமைகள் பெறவில்லை. இனாம் மானியம் எனப்படுவது சுருங்கக் கூறவேண்டுமானால், இந்நாட்டு மக்களின், எழுச்சியை, உணர்ச்சியை, தன்மானத்தை எவ்வளவு குறைக்கமுடியுமோ அதற்கு உடந்தையாயிருந்து, முதலாளித்துவத்தையும், அந்நிய ஆதிக்கத்தையும், வளர்த்து வந்தன, கடவுள், புராணம், வேதம் என்ற போர்வையின் கீழிருந்து.

ஜமீன்தாரர்களுக்கும், பெரும் முதலாளிகளுக்கும் அரசியலாருக்கும், மற்றும் மக்களின் உழைப்பைக்கொண்டு உல்லாச வாழ்க்கையை நடத்தும் உலுத்தர்களின் திரு விளையாடல்களுக்கு, அவர்தம் டம்பாச்சாரி தனங்களுக்கு, இன்று இனாம் மானியத்தைப் பெற்றுள்ளவர்களாகக் கூறப்படுவோர் பெரும்பாலோர் தரகர்களாக யிருந்து வந்தார்களேயன்றி வேறில்லை.

இவ்வித தரகர்களாயிருந்த இனாம்தாரிகள் இன்று ஜமீன்தாரர்களைவிட முதலாளித்துவத்தில் கொழுத்து இருந்து வருகிறார்கள்.

இனாம் மானியமும் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டவுடனே அதை எதிர்த்து இன்றுவரை ஓயாது ஓலமிட்டுவரும்கூட்டத்தினரைப் பார்த்தாலே தெரிய வரும், இனாம்தாரிகள்

(10-ஆம் பக்கம் பார்க்க)

திறந்த மடல்

— கூத்தாசன் —

திருமதி: விஜயலட்சுமி பண்டிட்,
மாஸ்கோ தூதர்.

அம்மையாரே வணக்கம், தாங்கள் ஐக்கிய நாட்டு பொதுச் சபையில் செய்து வரும் காரசாரமான சொற்பொழிவுகளைக் கண்டு உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் தென் ஆப்பிரிக்கா "நிறத்திமிர்" அவதாரமாகிய ஸ்மட்ஸ் துரையின் ஆணவத்தை, கருப்பர்கள் என்ற காரணத்திற்காக அவ்வெள்ளையர் காட்டிவரும் இனவெறியை தவிடுபொடி யாக்கி வருகிறீர்கள். அதற்காகவும் உங்களுக்கு நன்றி பாராட்டுகிறேன்.

ஆனால் அதே சமயத்தில் நம் நாட்டில் இருந்துவரும் நிறத்திமிர் படைத்த, இனவெறி பிடித்த கும்பலைப்பற்றி தங்களைப் போன்றார் கவலைப்படாதிருப்பது ஏன்? இதற்கு முன்னர்தான் வெள்ளையனிருந்தான் அதனால் இவ்வித முற்போக்கான காரியங்களைச் செய்ய தடையிருந்தது என்று கூறலாம்.

ஆகஸ்டு சுயராஜ்யத்திற்குப் பின்னும், மாஸ்கோவுக்கு, ஐக்கிய நாட்டு சபைக்கு தங்களைப்போன்றார் பிரதிநிதிகளாகச் செல்லும் நிலை ஏற்பட்டுங்கூட இந்திய உபகண்டத்தில் குறிப்பாகத் தென் நாட்டில் பிராமணன், சூத்திரன், பஞ்சமன் என்ற வேறுபாடுகளும் அதற்கான இதிகாச—வேதங்களும் மற்ற இனத்தவர்களை கேவலமாகத் துவேஷிக்கும், அடிமைப்படுத்தும் கடவுள் கதைகளும் அதை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரச் சுரண்டலும் நடைமுறையிலிருப்பதைத் தடுக்க சிறிதாவது கவலை எடுத்துக் கொண்டீர்களா?

ஸ்மட்ஸின் இனவெறி, அகம்பாவம் கட்டாயம் மட்டந்தட்ட வேண்டுந்தான் அதற்கு யாரும் குறுக்கே நிற்கவில்லை. அதேபோன்று இந்நாட்டிலுள்ள பார்ப்பனீய வெறியை ஒழிக்க உங்களைப் போன்றார் கவலை கொள்ளா திருப்பது ஒழுங்கல்ல.

நம்மிடத்தில் குப்பை கூலங்களை வைத்துக்கொண்டு மற்றவர்களை நையாண்டி செய்வதினால் ஸ்மட்ஸ் போன்ற நிறத்திமிர்காரர்கள் உங்களைப் போன்றவர்களின் பேச்சை வெத்து வேட்டு என்றே கருத வேண்டியிருக்கும்.

ஃ ஃ

பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்.

இந்துஸ்தான் பிரதமரே வணக்கம்.— தாங்கள் டெல்லியில் நடைபெறும் சர்வ தேச தொழிலாளர் மாநாட்டில் பேசுகையில், விவசாய மக்களைப்பற்றியும், கிராம முன்னேற்றத்தின் அவசியத்தையும் எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள், அதை அனைவரும் வரவேற்றே தீருவார்கள்.

அதே சமயத்தில் ஜமீன்தாரிசத்தை ஒழிக்க இந்திய சர்க்கார் தீர்மானித் திருப்பதாகவும், ஆனால் அமுலுக்கு வராமலிருப்பது பற்றி வருந்துவதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

சர்க்காரின் பிரதமராக தாங்களேயிருந்துகொண்டு ஜமீன்ஒழிப்பு அமுலுக்கு வரவில்லையென்றால் உங்களை வேறு சக்தி ஆட்டிவைக்கிறதென்பது வெளிப்படையாகத் தெரிகிற தல்லவா? அதை நான் கூறினால் சில காங்கிரஸ் தோழர்களுக்குக் கோபம் பொத்திக் கொண்டு வருகிறது.

அந்த "சக்தி" தான் காங்கிரஸ் மேலிடமென்கிற பாசிஸ சபை. சென்னை அரசியலார் ஜமீன்ஒழிப்பில் கையாண்ட முறைக்கு வக்காலத்து வாங்கி இனும்தாரிகளுக்கு கோடிக்கணக்கான பொருளை கொட்டி கொடுக்கவும் அந்த பாசிஸ சபை சிபார்சு செய்துள்ளதாம்.

வடநாட்டவராகிய தங்களைப் போன்றாரே இன்றைய பாசிஸ வெறியர்களின் போக்கைக்கண்டு முகாரி ராகம் பாடுகிறீர்களென்றால், திராவிட நாட்டினராகிய எங்கள் கதி இன்னும் கூறவேண்டுவதில்லை:

எனவே இந்துஸ்தான ஆதிக்கத்திலிருந்து எங்கள் மாகாணத்தைத் தனியாகப் பிரித்துவிடும் காரியத்திலாவது தாங்கள் ஆவன செய்தால் அதுவே திராவிடத்துக்கும், திராவிட மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தாங்கள் செய்த பேருதவியாகும். அதை விடுத்து இன்னும் நூற்றுக்கணக்கான சர்வ தேச மாநாட்டில் தாங்கள் தேன் ஒழுகப் பேசினாலும் பயன் இல்லை.

ஃ ஜீ

காளா வேங்கட்ராவ் அவர்கள்
சென்னை.

ரெவின்யூ மந்திரியாரே வணக்கம்,

தாங்கள் இனும்தாரிகள் விடயத்தில் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று சென்னை இனும் விவசாயிகள் மாநாட்டில் உறுதி கூறியிருப்பதைக் கண்டு எல்லா விவசாயிகளும் மனமகிழ்ச்சியடைகின்றனர்.

தமிழ் நாட்டுப் பார்ப்பனீயம் ஜனநாயகத்தையும் மீறி வடநாட்டு ஆதிக்கக்காரர்களின் காலடியில் மண்டியிட்டு, தனக்குசாதகத்தை தேடி வருவதாகவும் தெரிகிறது.

எது எவ்வாறாயினும் இந்த ஜமீன்—இனும் ஒழிப்பு விடயத்தில் தாங்கள் வடநாட்டு தாக்கீதுகளை அஞ்சாது எதிர்த்து நின்று ஏழை விவசாயிகளுக்கு ஆவன செய்ய கடைசிவரை உறுதியுடனிருக்க வேண்டுகிறேன். இந்த ஒரு நல்ல காரியத்துக்காகத் தங்களது பதவியை இழக்க நேர்ந்தாலும் அதை துச்சமாக மதியுங்கள். நாட்டின் ஏழைமக்களின், விவசாயதொழிலாளரின் முற்போக்காளரின் சக்தி தங்கள் பக்கமே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்த இணையற்ற சக்தியை வடநாட்டு பாசிஸமோ, தென்னாட்டு பார்ப்பனீயமோ அசைக்க முடியாது என்பதையும் தாங்கள் அறியாததல்ல.

திருச்சி பஸ் சர்விஸ் தொழிலாளர்

திருச்சி ராஜகோபால் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர், தங்களுடைய குறைகள் உடனடியாக தீர்க்கப்படாவிட்டால் நவம்பர் 3-ந்தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக மானேஜ்மெண்டாருக்கு அறிவித்துள்ளனர். வேலைநிறுத்தத்தை நிறுத்த சமரஸ முயற்சியும் நடை பெறுவதாகத் தெரிகிறது.

குடல் வாதமா? கவலை வேண்டாம்.

ஜெயராம் காயசுத்தி லேகியத்தை சாப்பிடுங்கள். 2-வேளையில் குணமளிக்கும்.

1 சேர் ரூ. 4-0-0 ½ சேர் ரூ. 2-2-0

V.P.P. வேறு. ஜெயராம் வைத்திய சாலை
28, காசி விஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்

சீர்திருத்த திருமணம்.

5-11-47 புதன் காலை 7 மணிக்கு தோழர். T. சென்னகேசவனுக்கும் தோழியர். காமாட்சி யம்மைக்கும் வேலூர் 'தீப்பொறி' ஆசிரியர் தோழர் C. P. சிற்றரசு அவர்களின் தலைமையில் தர்மபுரி மணமகள் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

தோழர்கள். பென்னாகரம் வி. எஸ். நடேசன் திருப்பத்தூர் எம். நடேசன் பேசுவர்.

இளைஞர் இலக்கியக் கழகம் பேரம்பூர்
இரண்டாவதாண்டு விழா

8-11-47 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு சென்னை பார்க்டவுன் மெமோரியல் மண்டபத்தில் நடைபெறும்.

அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் தலைமை தாங்குவார் அறிஞர் சி. என் அண்ணாதுரை மற்றும் பலர் பேசுவர்.

அவள் சொன்ன கதை

........(இரே. சம்புநாதன்.)........

★

இடம்: பெரிய சத்திரம் :

வாழ்க்கையில் கெட்டவர்கள்—திருடர்கள்—கொலை செய்தவர்கள்—போலீஸாருக்கு தெரியாமல் வாழ வேண்டியவர்கள், எல்லாம் தங்களை காவி யுடையால் மறைத்துக்கொண்டு கண்ணியமான துறவிகள் போல் அங்கு வருவதும் செல்வதுமாக இருப்பார்கள்.

அன்று இரவு நிலவு பால் போல் ஒளி வீசிற்று.

உலகமே அமைதியில் இருந்த நேரமது.

சத்திரத்திற்குள் மாத்திரம் சில பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தது.

ஒருவன் மட்டும் ஒன்றும் பேசாமலும், தூங்காமலும் விழித்துக்கொண்டு வேதனை நிறைந்த உள்ளத்தோடு காணப்பட்டான். யாரோ பேசுவதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

உன் ஊர் எது?

பரமணி

பெயர்?

கமலம்

எவ்வளவு நாளாக இப்படி பிச்சை எடுக்கிறாய்?

நாலைந்து நாளாக

இதற்கு முன்?

சிறையிலிருந்தேன்

எதற்காக?

கொலை செய்ததற்காக

யாரைக் கொலை செய்தாய்?

என் கண்மணியை, எழிற் செல்வத்தை இன்பத் திருவிளக்கை, பெற்ற பிள்ளையை.

அடி பாதகி, குழந்தையைக் கொன்றாயே; சற்றும் இறக்கமில்லாதவள்.

என்னைப்பற்றி உனக்குத் தெரிந்திருந்தால் அவ்விதம் சொல்லமாட்டாய், ஊம்.

சொல்லேன் தெரிந்து கொள்கிறேன்.

எங்கள் பரமணியிலே நாங்கள்தான் சற்று ஏழையான குடும்பம். கொஞ்ச நிலத்தைக் குத்தகையாக வைத்துக்கொண்டு மானமாக வாழ்க்கை நடத்தி வந்தோம். நான் ஒரே பெண்ணுகையால் செல்லமாக வளர்க்கப்பட்டேன். நான் வளர, வளர, என் பெற்றோர்களுக்கும் கவலை வளர்ந்தது. காரணம் என் பெற்றோர்கள் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள். எங்கள் வீட்டிற்கு யாருமே வருவதில்லை. எங்களுக்கு வரும் கஷ்டங்களை நாங்கள்தான் சமாளித்துக்கொள்ள வேண்டும்.

இந்த நிலைமையிலே நாங்கள் இருந்தோம். நான் பருவ மங்கையான பிறகு என்னை யாரும் திருமணம் செய்துகொள்ள முன் வரவில்லை. ஊரிலோ, வீணான வதந்திகள் பரவிற்று. இதை பார்த்திருக்க மனமில்லாத என் தாய் எங்களை விட்டுப் பிரிந்து மறைந்து விட்டாள். காலச்சக்கரம் வேகமாக சுழன்று கொண்டிருந்தது. அறுபது வயது கிழவர் ஐந்தாம் தாரமாக என்னை மணந்து கொள்ளச் சம்மதித்ததும் என் தந்தை சந்தோஷம் தாங்காமல் என்னை அவருக்கு உடனே திருமணம் செய்து கொடுத்தார். நானும் வேறு வழியில்லாததால் சம்மதித்தேன்.

என் கணவருக்கு நான் விளையாட்டுக் கருவி. தாத்தாவும் பேத்தியும் வேறு எப்படி இருக்க முடியும்; பவுன் நகைகளும் பட்டுச் சேலையும் வாங்கித் தந்தாரே ஒழிய என் இளமையைத் திருப்தி செய்ய அவரால் முடியவில்லை. அது அவர் குற்றமும் அல்ல. பணத்தை வாரி, வாரி, இறைத்தார். பணம் என்ன செய்யும். இளமையை தணிக்கும் சக்தி அதற்கேது. இவற்றை யெல்லாம் கண்டது அவருக்கே பிடிக்கவில்லையோ என்னமோ, நாலைந்து மாதங்களில் இவ்வுலகில் என்னைத் தனியாக்கி விட்டுச் சென்று விட்டார்.

அவர் இறந்ததும் என் அன்பைப் பெற பல இளங் காளைகள் போட்டியிட்டன. அவற்றிலே முத்துகிருஷ்ணன் என்பவர் வெற்றி கண்டார். யாருக்கும் தெரியாமல் என் வீட்டிற்கு வருவதும், இரவு நேரங்களில் தங்கிவிட்டு செல்வதும் வழக்கமாகி விட்டன. இந்த செய்தி ஊராருக்குத் தெரிந்துவிட்டது. பலர், பல விதமாகப் பேசத் தொடங்கினர். இதிலிருந்து முத்துகிருஷ்ணன் வீட்டிற்கு வருவதில்லை. இரண்டு நாள் கழித்து அவர் எங்கேயோ ஓடிவிட்டதாக எல்லோரும் பேசிக்கொண்டனர்.

ஓடிவிட்டார்! என்னிடம் ஒரு புதிய ஜீவனை கொடுத்துவிட்டு ஓடிவிட்டார்.

என்னை ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டார். நானும் ஏமாந்துவிட்டேன். நான் வெளியிலேயே வருவதில்லை.

மாதங்கள் ஓடின. பூர்ண கர்ப்பவதியாக இருந்தேன். தற்கொலை செய்து கொள்ளலாம் என நினைத்தேன். ஆனால் குழந்தையைப் பார்க்க வேண்டுமென ஆசை மேலிட்டது. கடைசியில் குழந்தையும் பிறந்தது. என் கண்மணி அவரைப் போலவே இருந்தான். நான் பெருத்த மகிழ்ச்சி யடைந்தேன். மறுகணம் எதிர்கால உலகிலே அவனுக்கு விதவையின் மகன், விபசாரியின் மகன், என்ற முத்திரையோடு வாழவேண்டுமே என்று நினைக்கும்போது கொன்றுவிடுவதே மேலென முடிவுக்கு வந்தேன்.

ஒருநாள் அதிகாலையில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஆற்றுக்குச் சென்றேன். படித் துறையில் யாரோ குளித்துக் கொண்டிருந்தனர். எனவே கொஞ்ச தூரம் சென்று குழந்தையைப் பார்த்தேன். சிரித்தான். என் உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது. குழந்தையுடன் ஆற்றில் குதித்துவிட்டேன். மறுநாள் கண் விழித்துப் பார்க்கும்பொழுது ஆஸ்பத்திரியில் காவலில் இருந்தேன். நான் விழுந்ததும் குளித்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிவந்து தூக்கி விட்டனராம். குழந்தை ஆற்றோடு போய்விட்டான். பிறகு விசாரணை நடந்து இரண்டு வருடம் தண்டித்தனர். இரண்டு நாளைக்கு முன்புதான் விடுவிக்கப்பட்டேன். இனி ஊருக்குச் செல்வதை விட இது மேலென்று வந்துவிட்டேன்.

அய்யோ பாவம். அந்த பாவி அப்படி விட்டுட்டு ஓடக்கூடாது. இதைக்கேட்ட அவன் திடுக்கிட்டு எழுந்து ஓடினான். பக்கத்திலிருந்த தோப்பிற்குள் ஓடிக்கொண்டிருந்த ஆற்றை நோக்கி அவன் கால்கள் விரைந்தன. என்னால்தான் அவளுக்கு இக்கதி என அவன் வாய் புலம்பிற்று.

திடீரென ஆற்றில் விழும் சத்தம் கேட்டது. குழந்தையைத் தேடிப் புறப்பட்டு விட்டான், தூரத்தில் இரண்டு ஆந்தைகள் போட்டியிட்டு அலறின.

இதை ஒன்றையும் கவனிக்காமல் சத்திரத்தில் இருந்தவர்கள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர்.

பாண்டியன் பாடல்கள்!

★★★

12. எங்கெங்கும் பார்ப்பான்

வழக்குறை மன்றத்தில்
வாழ்பவன் பார்ப்பான்
வழக்கமாய் உழைப்பிலா
வாழ்வினன் பா ப்பான்
தேக்க மரத்தினை
தேக்கியே வைத்து
மிக்க விலைக்கு
விற்பவன் பார்ப்பான்
“இஞ்சினீர” படிப்பிலே
எத்தனைப் பார்ப்பான்
இமய மலையிலும்
இருப்பவன் பார்ப்பான்
“டாக்ட்ட”ராய் எங்குமே
தங்குவோன் பார்ப்பான்
தண்ணீர் பந்தலில்
தழைப்பவன் பார்ப்பான்
கதர்க்கடை தன்னிலும்
காண்பவன் பார்ப்பான்
களிப்புடன் ரயிலில்
கணக்கிலாப் பார்ப்பான்.

(தொடரும்)

உடனே எழுதுங்கள்!

தலைவர் பெரியார் அவர்கள் இம்மாதம் 11, 12 தேதிகளில் புலயகுளம், கோபி ஆகிய இடங்களில் ஆற்றிய அரிய சொற்பொழிவுகள் புத்தக வடிவில் தயாராகிறது.

★

விலை அணா 2

ஏஜெண்டுகளுக்கு 50 காபிகளுக்குக் குறைத்து அனுப்ப இயலாது.

மானேஜர், கூத்தரசன் பதிப்பகம்,
திராவிடன் ஆபீஸ்
6, சங்குராம செட்டி தெரு, சென்னை 1.

திராவிடன்

சென்னை 2-11-47 ஞாயிறு

உணவு உடை பங்கீடு!

போர் கால நெருக்கடியில் ஏற்பட்ட போக்கு வரத்து சங்கடங்களினாலும், போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு உணவு அளிக்கப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டும், உணவு—உடை, மற்றும் அவசியமான பொருள்கள் மீது கட்டுப்பாடு, பங்கீடு முறை முதலியவைகளை அமுலுக்குக் கொண்டுவந்தாலன்றி பொது மக்களின் தினசரி வாழ்க்கை நடப்பது முடியாதகாரியமாயிருந்து வந்தது. அத்துடன் இந்த கண்ட்ரோல், பங்கீடுமுறை ஆகியவைகள் முதன் முதலாக நடைமுறையில் கையாளப்பட்டபோது ஓரளவு அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சிப்பந்திகள் நேர்மையுடனும், பொதுமக்களின் வாழ்க்கையில் அக்கரை காட்டியும் நடந்து வந்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அந்நாட்களில் இந்த ரேஷன் முறை இல்லாதிருந்திருப்பின் நாட்டில் பல நெருக்கடிகளும், ஏழைமக்கள் உயிர் வாழ்வதே கடினமாயிருந்திருக்குமென்பதில் ஐயமில்லை.

ஆனால் இன்றைய நிலையில் உணவு உடை பங்கீடும், மற்ற பொருள்கள் மீது கட்டுப்பாடும் இருக்கவேண்டுவது அவசியமா அதனால் பலன் உள்ளதா? அல்லது வீண்தொந்திரவுகளும் மக்களுக்கு இடையூறுகளும், கள்ள மார்க்கெட்காரர்கள் பெருகுவதற்குந்தான் பயன்படுகிறதா என்பதை ஆலோசிக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

நமக்கு மட்டுமல்ல இந்த எண்ணம் காந்தியார் அவர்களிலிருந்து நமது பிரதமர் ஓமந்தூரார் வரையிலும், இன்னும் பல தலைவர்களின் தனிப்பட்ட கருத்தும் இவ்விதமேயிருந்துவருவதை நேயர்கள் அறிவர்.

பத்து தினங்களுக்கு முன் காந்தியார் அவரது பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் உணவு உடை பங்கீடு முறைகள் இனி கூடாதென்று கூறியுள்ளார் நமது சென்னைப் பிரதமர் அவர்கள் பத்திரிகை நிருபர் கூட்டத்தில் பேசுகையில் "உணவு—உடை ஆகிய முக்கியபொருள்களின் மீதுள்ள கட்டுப்பாட்டை ரத்து செய்யவேண்டியது அவசியமென்றும் அவ்விதம் செய்தால்தான் நெருக்கடி தீருமென்றும் இதற்கு எதிரிடையாயிருப்பவர்கள், வியாபாரிகளும்- அதிகாரிகளுமேயன்றி மக்கள் அல்லவென்றும், எனினும் அடுத்த மந்திரிசபை கூட்டத்தில் இதைப் பற்றி முடிவு செய்யப் போவதாகவும், ஆனால் அது எனது தனிப்பட்ட கருத்து என்றும் குறிப்பிட்டிருக்கிறார் உண்மையிலேயே இன்று உணவு—உடை பங்கீடு முறையை அமுல் நடத்தப்படும் விதம் மக்களுக்குத் திருப்தியளிப்பதாக எவரும் கூறமுடியாது. மிகமிக ஏழைமக்கள் இரண்டுபடிமூன்றுபடி அரிசியை கொண்டுவருவது கண்டு பிடிக்கப்படுவதாகப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதைக் காண்கிறோம். இவ்விதம் கொண்டு செல்வதை நாம் ஆதரிக்கவில்லையென்றாலும், அதே சமயத்தில் பங்கீடு முறை விதியை மீறி அரிசியும், விறகும், கண்ட்ரோலுக்கு உட்பட்ட பொருள்களும் ஏராளமாக பலர் உபயோகிப்பதாகவும் கூறப்படுகிறது. இது எவ்வளவு வரை உண்மை என்பதைப் பற்றிய விடயம் ஒருபக்கமிருந்தாலும், பங்கீடு அதிகாரிகள் சிப்பந்திகள் கண்டிப்பான முறையில் இருப்பதாகக் கூறிக்கொண்டாலுங்கூட அதையும் மீறி ஏராளமான பொருள்கள் வெளியேறுகின்றன என்பதை அனைவரும் அறிவர்.

பொதுவாகக் கூறவேண்டுமானால் பங்கீடு முறை அமுல்களோ சட்டத்திட்டங்களோ இன்று ஏழை மக்களிடத்தில் தான் தர்பார் நடத்தப்படுகிறதேயன்றி அந்த சட்டதிட்டங்களையும் ஏப்பம்விட்டு, அதிகாரிகளையும் ஏமாற்றிவிடும் "பெரிய பூதங்களின்" செய்கைகளை கண்டுபிடிப்பதற்கு இன்றுள்ள சிப்பந்திகளும் அதிகாரிகளும் போன்று பன்மடங்கு அதிகமாக்கினாலும் முடியாது போலிருக்கிறது.

அதுமட்டுமல்ல உணவு சாமான்களை எடுத்துக் கொண்டால் இவ்வளவு கஷ்டப்பட்டு "கள்ள மார்க்கெட்"டில் ஏழைகள் அதிகவிலைகொடுத்து வாங்கி வந்தாலும் அதை அதிகாரிகள் கண்டுவிட்டால் அதற்கு வேறு அபராதம், ஆக எவ்விதத்திலும் ஏழை மக்களுக்கும், குறிப்பாகத் தொழிலாளர்களுக்கும், நடுத்தர மக்களுக்குந்தான் தொல்லையே யன்றி வேறில்லை

தவிர இந்த பங்கீடுமுறைப்படியே, அளவுபடியேதான் மக்கள் உணவோ அன்றி உடையையோ பெற்று, உண்டு வருகின்றனர் என்று கூறத் துணிபவர்கள் ஒருவருமிருக்க முடியாது.

இந்த லட்சணத்தில் எதற்காக கட்டுப்பாடு, பங்கீடு என்ற ஜபர்தஸ்து? அதற்கென தனி இலாக்கா ஏன்? ஆயிரக்கணக்கான நூற்றுக்கணக்கான சம்பள கிம்பளங்கள் ஏன்? இதுவும் போதாதென்று இந்த வழக்குகளை விசாரித்து நீதி வழங்க வேண்டிய நிலை ஏன்? இவைகளினால் எல்லாம் ஏதாவது பலன் அடைந்திருப்பதாகக் கூற முடியுமா என்றுதான் கேட்கிறோம். நாம் இவ்வாறு கூறுவதால் சிப்பந்திகளோ அதிகாரிகளோ லாயக்கில்லை என்றோ, அவர்களை வேலையிலிருந்து நீக்கி வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டுமென்றோ கூறுவதாகக் கருத வேண்டாம். அந்த சிப்பந்திகளில் பெரும்பாலோர் ஏழைகளும் படித்த மாணவர்களுமேயாவர்.

ஆக இவ்வித கட்டுப்பாடு எவ்விதமிருப்பினும் உணவு விடயமாகையால் மக்கள் தங்களின் வயிற்றுப் பசி தீர அதிக விலை கொடுத்து வாங்க முயலுவது இயற்கை. அதை ஒழிப்பதென்பதும் இன்னும் 10 ஆண்டுகளானாலும் முடியாத காரியமென்பதே நமது எண்ணமாகும்.

இந்த நிலையில் கட்டுப்பாட்டை உணவு—உடை விடயத்தில் மேலும் நீடிப்பது நமது பிரதமர் கூறுவது போன்று சிலருக்கு வேம்பாயிருக்கக்கூடும். அதற்காக மக்களின் கஷ்டத்தையும், வீண் தொல்லைகளையும் வளர விடுவது நீதியாகாது.

உணவு, உடை மற்ற பொருள்கள் மீதுள்ள கண்ட்ரோல், பங்கீடுமுறையை உடனே ரத்து செய்து விட்டு பரீட்

சார்த்தமாக 6-மாத காலம் பார்க்கட்டும், அரசியலார். இன்று சாதாரண மக்கள் ஒரு படி அரிசியை இரண்டு ரூபாய் வரையில் கொடுத்து "கள்ள மார்க்கட்டில் வாங்குவதாகக் கூறப்படும் நிலை ஒழிந்து பகிரங்கமாக வேண்டுமானால் 1 படி அரிசியை 10 அல்லது 12 அணுவுக்குள் வாங்கும் தன்மையாவது வரலாம். இவ்விதமான சங்கர்ப்பத்தில் யாருக்கும் பயப்படவேண்டியிருக்காது. திருட்டுத்தனமாக கொண்டுவரும் கெட்ட பழக்கம் வளராது. அதற்காக அஞ்சி நடுங்கி தப்பித்துக்கொள்ள வீண் செலவு செய்ய வேண்டிய தொல்லைகளும் ஏற்படாது என்பதே நமது தாழ்மையான அபிப்ராயமாகும்.

இன்று நம் சடை வீதிகளில் இதற்கு முன்பு ஒன்றுக்கு பத்து விலைகொடுத்தாலும் கிடைக்காத ஓவல்டின், ஹார்லிக்ஸ் மற்ற மருந்து வகைகள், இன்னும் பல சாமான்கள், ஒன்றுக்கு இரண்டு விலையிலாகிலும் கிடைக்கும் அளவில் மலிந்து கிடப்பதை காணகிறோம். அதை வாங்குவோரும் யாரும் இல்லை. கண்ட்ரோல் என்று இருப்பதால்தான் அதை பதுக்குவதற்கும், ஒன்றுக்கு பத்தாய் விற்பதற்கும் மற்றும் பலகாரணங்களுக்கும் வகை ஏற்படுகிறது.

ஆகவே அரசியலார் உடனடியாக உணவு, உடை இந்த இரண்டிலுமாவது பங்கீடு முறையை, வேண்டுமானால் 6 மாத காலத்திற்கு ரத்து செய்து பார்த்து பின்னர் அதை நிரந்திரமாகவே செய்ய வேண்டுகிறோம். அவ்விதம் உணவு உடை, மற்ற சாமான்களிலே உள்ள கட்டுப்பாடு முறையை ரத்து செய்யும்போது அதில் சம்பந்தப்பட்டுள்ள சிப்பந்திகளுக்கும் மற்றவர்களுக்கும் வேறு வேலை கொடுப்பதற்கு ஆவன செய்ய அரசியலார் மறந்து விடக் கூடாது என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

சிதம்பரம் தடை உத்திரவு

திராவிடர் இயக்க கொள்கையோ, பிரசாரமோ மக்களிடத்தில் வீணான குழப்பம், கலகம் அல்லது பதவிவேட்டைக் கான பொய்யுரைகள் என்பதில்லாமல் எல்லா மக்களும் சரிநிகர் சமத்துவமாய் வாழவேண்டும் என்றதை அடிப்படையாகக் கொண்டதென்பது அனைவரும் அறிந்ததேயாகும்.

அதற்கேற்ப இயக்கத் தலைவர் பெரியார், இயக்கத்தின் எதிரிகள் எனப்படுவோர் கலவரத்தை விளைவித்தாலும் திராவிடர் கழகத்தவர்கள் கடைசிவரை அமைதியை கடைப்பிடித்து வரவேண்டும், இன்னும் காட்டிக் கொடுக்கும் கூட்டத்தினரின், கும்பலின் விஷமத் தனத்தினால் அரசியலார் தடை உத்தரவு விதித்தாலும் அதை தற்சமயம் மீறவேண்டாமென்றும் கண்டிப்பான உத்தரவிட்டுள்ளார்.

இவ்வளவிருந்தும், வேணுமென்றே சில கயவர்கள் காங்கிரஸ் பேரால், இந்து முஸ்லீம் சச்சரவு என்ற பேரால் கழகத்தின் வளர்ச்சியை சீர்குலையச் செய்ய முயன்று வருகின்றனர். இதை அரசியலார் அறியார் என்று கூறமுடியாது.

நிற்க, அண்ணாமலை நகரில் பெரியார் விழாவின் போது காங்கிரஸ் பேரால் காலிகள் செய்த அட்டூழியத்தை யாவரும் அறிவர்.

அதோடு நிற்காமல் சிதம்பரம் தாலுக்காவில் திராவிடர் கழகக்கொடியை ஏற்றுதல், கூட்டம் போடுதல் கூடாதென 15-நாட்களுக்குத் தடை உத்திரவு விதித்து கழகக் கொடியை ஏற்றுவித்தால் கிசான் தகராறு வரும் என்று காரணம் காட்டப் பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது:

உழவர்களுக்கு உரிமைவேண்டுமென்பதே திராவிடர்கழகத் திட்டம் என்பது வெளிப்படையேயாயினும் அதற்காக கலகம் விளைவிக்க முயன்றதாகவும் அல்லது திராவிடர் கழகக் கொடியை கண்டு கிசான்கள் எதிர்க்கின்றனர் என்றும் கூறமுடியாது.

எனவே சிறிது கூடசம்பந்தமில்லாத காரணங்களைக் கூறி அண்ணாமலை நகரில் நடைபெறவிருந்த திராவிடர் கழகக் கூட்டத்தை அதிகாரிகள் தடுத்திருப்பதுடன் மேலும் தடை உத்தரவு விதித்திருப்பதும் நீதியல்ல என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

ஒருசிலர் சேர்ந்து மூவர்ணக்கொடி பறப்பதினால் கலவரம் வந்து சேருகிறது என்று கூறினால், காங்கிரஸ்கூட்டங்களுக்கு இந்த அதிகாரிகள் தடை விதிப்பார்களா யென்று கேட்கிறோம். ஒருசாரார் மற்றொரு கட்சிமீது புகார் கூறிக் கொண்டு, அதற்கு அதிகாரிகள் தடை உத்திரவுகளை விதிப்பதையே வழக்கமாகக் கொண்டால், இந் நாட்டில் எந்த இயக்கக்கூட்டமாவது நடைபெற முடியுமா என்பதையும் யோசிக்க வேண்டும்.

பிச்சைக் காரனுக்குப் பயந்து சமையல் செய்வதை நிறுத்தியதைப் போலவும், சீப்பை மறைத்து வைத்து விட்டால் திருமணம் நின்றுவிடும் என்று நினைத்த தன்மையைப் போலத்தான் தடைவுத்திரவினால் திராவிடர் கழக வளர்ச்சியை தடுத்துவிடலாம் என்று கருதுவதுமாகும். சிதம்பரம் தாலுகா திரவிடர் கழகக் கூட்ட தடைஉத்திரவு போன்ற தன்மைகளை மேலும் மற்ற பகுதிகளில் வளரவிட்டு, நம்நாடு இன்றுள்ள நிலையில் வீண்கொந்தளிப்பைத் தேடிக் கொள்ளக் கூடாதென்பதே நமது வேண்டுகோளாகும்.

எனவே அரசியலார் குறிப்பாக நமது பிரதமர் கனம் ஓமந்தூர் ராமசாமி அவர்களாவது இவ்வித நீதியற்ற தடைஉத்திரவுகள் இனி கிளம்பாவண்ணம் செய்ய வேண்டுவது நிங்காக் கடமையென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

தோழர். பழனிச்சாமி

உழைப்பே உருவாய் அமைந்த அமைதியை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் தோழர், வாழ்க்கையில் மிக மிக கஷ்டங்களை அனுபவித்துங் கூட சிலரின் மிரட்டல் பயமுறுத்தல் களுக்கு கொஞ்சமும் அஞ்சாது திராவிடர் கழக வளர்ச்சிக்காக சென்னை நகரில் உணர்ச்சியுடன் தொண்டாற்றிவந்த புரசைத் தோழர் எஸ். டி. எம். பழனிச்சாமி அவர்கள் சில நாட்களாக நோய்வாய்ப் பட்டிருந்து 25-ந் தேதி மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டு திடுக்கிட்டு விட்டோம். புரசை திராவிடர் கழகத் தலைவராகவும், சென்னை ஜில்லா திராவிடர் கழக நிர்வாக உறுப்பினராகவும் சென்னை கருஞ்சட்டைப்படையின் அமைச்சராகவுமிருந்து ஓயாது உழைத்து தன்னலமற்ற தொண்டர், தோழர் பழனிச்சாமி அவர்கள் மறைந்தது சென்னை திராவிட இயக்கத் தோழர்களுக்கும் கழகத்திற்கும் பெரிய நஷ்டமென்று கூறுவது மிகை யாகாது. அவரின் பிரிவால் வருந்தும் அவரது உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வாறிருக்க, இந்த கம்யூனிஸ்டு தலைவர்கள் எனப்படுவோரும், குறிப்பாக அந்த 'உருவமும்' திராவிடர் இயக்கத்தைப்பற்றி, தலைவரைப்பற்றி பத்திரிகையைப்பற்றி உண்மைக்கு மாறாக சென்னை நகர்முதல் தமிழ் நாடெல்லாம் விஷமப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனரென்றால், இதுவரை அக்கூட்டம் பாசிஸ காங்கிரசை எதிர்த்துவந்து கடைசியில் அதற்கு "மண்டியிட்டு சலாம் வாங்கிய" இழித் தன்மையைக் கண்டு, கம்யூனிஸ்டு தோழர்களும், தொழிலாளர்களும் பல இடங்களில் கழகத்தில் சேர்ந்து வருவதின் எதிரொலியே யன்றி வேறில்லை.

இந்த மதிகெட்ட சிந்து பாடும் உருவங்களின் போக்கு விரைவில் தோல்வியுறுவது மட்டுமல்ல, இனி தொழிலாளர் அனைவரும் திராவிடர் கழகத்தில்பெருவாரியாகச்சேரப்போகிறார்களென்பது உறுதி. விஷமப்பிரசாரம் நிலைக்காத வெற்றியையும், நிரந்தரமான தோல்வியையுந்தான் தரும் என்பதில் ஐயமில்லை.

எனினும் இந்நாட்டு "கம்யூனிஸ்டுகள்" எனப்படும் பார்ப்பனீய தலைவர்களின், "டிரம்மர்பாய்"களாக விளங்கி வரும் உருவங்களின் விஷமப்பிரசாரம் என்னும் வால் அளவுமீறி நீண்டு வருவதாலேயே இதை நாம் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் கம்யூனிஸ்டு கட்சியை உள்ளபடியே நம்பி சேர்ந்துள்ள தோழர்கள் தவறாகக் கருதவேண்டாம், கம்யூனிஸ்டு தத்துவத்திற்கு கழகம் புறம்பானதென்று.

பொதுவாக தொழிலாளர் தோழர்களே, பொதுவுடமைக் கொள்கையில் ஆர்வமுள்ள உழைப்பாளிகளே, நண்பர்களே, இந்நாட்டில் உண்மை பொதுவுடமைக் கொள்கைக்கேற்ப உழைத்து வரும் திராவிடர் கழகத்தைப்பற்றி அதன் தலைவர்களைப்பற்றி, பார்ப்பனீயத் தலைவர்களின் பேச்சைக்கேட்டு துவேஷங் கொள்ள வேண்டாம். அதனால் திராவிடர் கழகத்துக்கு நஷ்டமில்லை. ஆனால் இந்நாட்டு உரிமையாளரான, உழைப்பாளரான திராவிட சமுதாயத்துக்கு, ஏழைத் தொழிலாளருக்குத்தான் பெரும் நஷ்டம் என்பதை உணர வேண்டுகிறோம்.

உண்மை சமதர்மஆட்சியை, தொழிலரசை நம் நாட்டில் உண்டாக்க வேண்டுவதே இன்றைய இன்றியமையாத கடமை; அதற்கான திட்டம் கொண்டதே திராவிடர் கழகம் என்பதை மீண்டும் எடுத்துக் காட்டுகிறோம். அது மட்டுமல்ல அதற்காக உழைக்கவும், அவசியம் நேருமானால் அரசியலாரின் அடக்குமுறைக்கும் பலியாகவும், திராவிடர் கழகம் தயாராயிருக்கிறது.

ஆனால் "வீரர்கள்" என்ற பெயரையும் ஓட்டுகளைப்பெறுவதையே பிழைப்பாகக் கொண்டு தொழிலாளரிடத்தே வீண் கொந்தளிப்புகளை உண்டாக்கி கடைசியாக ஒவ்வொன்றிலும் தோல்வியடைந்து ஏழை மக்களை நடுத்தெருவில் அலையவிட்டு தலைமறைவாய் ஓடித் திரிந்து பின்னர் தங்களது தோல்விப் பித்தலாட்டம் வெளிப்படுகின்றதே என்று அஞ்சி மற்றவர்களைப்பற்றி அபாண்டப் புளுகுகளை அள்ளி வீசும் அற்பர்களின் செய்கையை இனியும் நம்பி ஏமாற வேண்டாம் என்று எச்சரிக்கின்றோம்.

எனவே கம்யூனிஸ்டு கட்சியிலுள்ள தொழிலாளர்களே, நன்றாக சிந்தியுங்கள், உங்களின் எதிர்கால நல் வாழ்வு வெற்றி பெற வேண்டுமானால் கட்சி வேற்றுமையை விட்டு, உங்களுக்கென தனி அரசியல்கட்சியை வேண்டுமானால் நிறுவுங்கள். அதைவிட்டு யார் எப்படி கெட்டாலும் தங்களுக்கு தொழிலாளர் சங்கங்களில் பதவி, ஓட்டு கிடைத்தால் போதும் என்பதற்காக வரட்டு ஜம்பம் பேசிவரும் கயவர் தம் செய்கையில் எச்சரிக்கையாயிருங்கள் என்பதே நமது வேண்டுகோள். சந்தர்ப்பம் நேர்ந்தால் அவசியமானால், மேலும் பல விவரங்களை பின்னர் எழுதுகிறோம்.

போறையாரில் பெரியார் பிறந்த தின விழா

19-10-47 மாலை 5-மணிக்கு முன்னாள் அமைச்சர் எஸ். முத்தையா தலைமையில் சிறப்பாக நடந்தேறியது தோழர். சி. சுந்தரலிங்கம் கழக ஆண்டு அறிக்கையை வாசித்தார். சென்னை பாரிஸ் ர் கே. சி. சுப்ரமணியம் அவர்கள் கழகக் கொடியை யேற்றிவைத்தார். தோழர். ஜே. எஸ். வேலு பெரியார் தாழ்த்தப்பட்ட சமுகத்திற்கு செய்த சேவைகளை விளக்கினார் பின்னர் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் சுமார் இரண்டுமணி நேரம் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றியபின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரை கூற கழக ஆண்டு விழாவும், பெரியார் பிறந்ததின விழாவும் இனிது முடிவுற்றது.

ஆகஸ்டு சுயராஜ்யம் யாருக்கு ?

ஆகஸ்டு துரோகியாயிருந்த ஆச்சாரியாருக்கு, இந்திய சர்க்கார் மந்திரி பதவி, இன்று கவர்னர் பதவி, நாளை வரப் போகிறதாம் கவர்னர்ஜெனரல் பதவி. இளவரசி எலிஸபெத்தின் திருமணத்திற்காக லார்டு மவுண்ட்பேட்டன் லண்டன் சென்று திரும்பி வரும் காலத்திற்கு ஆச்சாரியார் வைசிராய் வேலையைப் பார்ப்பாராம்.

சென்னைமேல் சபை உறுப்பினராயிருந்த மதுரை பிரதிநிதி ராமசந்திரம் செட்டியார் இறந்து விட்டதால், அந்த இடத்திற்கு தோழர். சுந்தரராம அய்யரை காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு நியமித்துள்ளது.

எற்கெனவே கோபால்சாமி அய்யங்காரர்களுக்கு, சொண்டி ராமமூர்த்திகளுக்கும், மற்றும் பல ஆரியர்களுக்கும் பெரிய பெரிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே ஆகஸ்டு சுயராஜ்யமாகிய ராமராஜ்யம் யாருக்கு உரித்தானதாயிருக்கிறது என்பதை இனியாவது சிந்தித்துப் பார் தேசிய திராவிடனே. வைசிராய் பதவியை வகிக்க திராவிடரில் யாரும் இல்லையா? பரங்கியம் இல்லாவிடில் பார்ப்பனீயம் தானா ஆளவேண்டும் ?

மூல வியாதிகளுக்கு
"யௌவன பிராஷ்"
(கருணைக் கிழங்கு லேகியம்)

ஆபரேஷன் பயன்தராது. மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு. பவுத்திரக்கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம்.

12 நாள்	யௌவன பிராஷ்	ரூ. 3.
12 நாள்	நாகபஸ்பம்	ரூ. 2.

சரஸ்வதி வைத்தியசாலை, பழனி (S.I.)

சென்னை, சேத்துப்பட்டு—இளைஞர் சொற்போர் கழகத்தின் செயற்குழு கூட்டம் 26-10-47 காலை அமைந்தகரை, நகராண்மை பள்ளியில் திரு. எஸ். பாபு அவர்களது தலைமையில் நடைபெற்றது. அதுபோது காலஞ்சென்ற தலைவர் ஆங்கிலபேராசிரியர் எம். வரதராசனாருக்கு பதிலாக திருவாளர் கே.ஆர். அரங்கநாதனார் எம்.ஏ. அவர்களைக் கழகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திராவிடகழகத்தில்இன்றே உறுப்பினராக சேருங்கள்.

(10-ஆம் பக்கம் தொடர்ச்சி)

இன்னுங் கூறவேண்டுமானல் இந்த நஷ்ட ஈடுத் தொகையை சிறிது காலங் கடத்தியே கொடுப்பதென்று முன்னைய ஏற்பாடாயிருந்தது. டெல்லி காவடி சந்திப்பின் காரணமாக நஷ்ட ஈடுத் தொகையில் பெரும் பகுதியை முன்னதாகவே கொடுத்து, சிறிய பகுதிக்கு வேண்டுமானல் கடன் பத்திரம் கொடுக்கலாமென்ற சிபார்சு வேறே முளைத்துவிட்டது.

அன்பர்களே, காங்கிரஸ் திராவிடர்களே, காங்கிரசை உள்ளபடியே இன்னும் நம்பியுள்ள அருமைத் தொழிலாளர்களே, காங்கிரஸ் என்பது முதலாளித்துவ சபை, வடநாட்டு பாசிஸ வெறியர்களின் கைமுதலாக காங்கிரஸ் இன்று இருந்து வருகிறது, காந்தியார் போன்றவர்களின் உழைப்போ அல்லது மகத்துவம் என்று கூறப்படுவதோ பாசிஸத்தை வளர்ப்பதற்கே உபயோகப்படுகிறதேயன்றி ஏழை மக்களின் நல் வாழ்வுக்கல்ல என்று திராவிடர் கழகத்தினர் கூறினல் அதற்காக ஆத்திரப் படுகின்றீர்களே, இனம் ஜமீன் ஒழிப்பில் வடநாட்டுப் பாசிஸம் தலையிட்டுள்ள தன்மையை போக்கைக் கண்டபிறகாவது என்ன கூறுகிறீர்கள் ?

காங்கிரஸ் கட்சியானது ஏழை மக்களுக்காக யிருப்பது, தரித்திர நாராயண மூர்த்திகளைக் கொண்டது என்பது உண்மையானல் ஜமீன்—இனம் ஒழிப்பில் என்ன யோசனை கூறியிருக்க வேண்டும்.

இந்நாட்டின் உயிர்நாடியான உழைப்பவர்களின் உரிமையை இதுவரை கொள்ளைகொண்டுவந்த ஜமீன் இனம் தாரிசங்களே, நீங்கள் இதுவரை கொள்ளை யடித்துவந்த பொருளை அரசாங்கம் பறிமுதல் செய்திருக்க வேண்டும், இருந்தாலும் நாங்கள் அவ்விதம் செய்யாமல் இதோடு விட்டு விடுகின்றோம், நஷ்டஈடு என்று கேட்காதீர்கள் என்றல்லவோ கூறியிருக்க வேண்டும். அதுதான் முடியவில்லை யென்றாலும், 10 கோடி நஷ்ட ஈட்டை 5 கோடியாகிலும் குறைத்திருக்கக் கூடாதா? ஏன் அவ்விதம் செய்யவில்லை.

இனம்தாரிசம் என்ற பார்ப்பனீய பாதுகாப்புக்காக நம் நாட்டுப் பொருள் கொள்ளை போக வேண்டுமா, இது நீதியா? தொழிலாளி கூலி உயர்வு கேட்டால், சட்ட திட்டத்திலிருந்து சிறைவாசம் வரை தர்பார்.

எனவே 10 கோடி நஷ்ட ஈடு அதிகம் என்று மக்கள் போட்ட கூப்பாடு பலன் தராதது மட்டுமின்றி மேலும் நம் ஏழை மக்களின் பொருளும், நம் மாகாணத்தின் தன்மானமும், காங்கிரஸ் சட்டசபை கட்சியின் தீர்மானமும் நம்நாட்டு மக்களின் பெருவாரியான எண்ணமும் இனம் மானியத்துக்காக வட நாட்டவரிடம், பார்ப்பனீயத்திடம், "பறி கொடுத்தோமே மனம் பதைத்தோமே" என்று எண்ணி மனம் வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

எனினும் தோழர்களே, நம் வரிப் பணத்தில் மாதம் 150 ரூபாய் சம்பளம் வாங்கும் சட்டசபை உறுப்பினர்களாவது இந்த ஜமீன் நஷ்டஈடுத் தொகை விடயத்திலும், இனம் மானியம் ஒழிய வேண்டுவதிலும் உறுதியாயிருந்து ஆவன செய்தால் நம் மாகாணத்தின் தன்மானமும் ஏழை விவசாயிகளின் உரிமையும் வெற்றி பெறும் என்பது திண்ணம்.

அவ்விதம் செய்வார்களா? என்று பொறுத்திருந்து பார்ப்பதில் பயனில்லை. இன்றுமுதல் எல்லா கட்சியிலுமுள்ள முற்போக்குத் தோழர்கள் ஒன்றுகூடி நமது உள்ளக் கிடக்கையை அரசியலாருக்கும், சட்டசபை உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறவேண்டுவது இன்றியமையாததாகும். சட்டசபை சாஸ்வதமானதல்ல, மீண்டும் மக்களிடையே வந்துதான் ஆகவேண்டும் என்பதை நமது சட்டசபை உறுப்பினர்களும் கவனிக்கவேண்டும்.

உழைப்பவர் உள்ளம்.

கைத்தரி நெசவுத் தொழிலாளர் நிலைமைகளைப்பற்றி அறிந்துகொள்ளும் பொருட்டு சென்னை சர்க்கார் கைத்தரி விசாரணைக் கோர்ட் சார்பாக G. சந்தானபாபு B. A. (Hons) 20-10-47 மாலை மூன்று மணிக்கு சங்கரன்கோவிலுக்கு வந்தார். சங்கரன்கோவிலில் நெசவுத் தொழிலாளர் சங்கச் சார்பாக காரியதரிசி S. M. திருவுடையான் அவர்கள் ஷை சங்க மெம்பர் S. சங்கர குற்றாலம் ஷை சங்க மெம்பர் T. R. சுப்பிரமணியம் காங்கிரஸ் ஊழியர் மா. அ. சிவசங்கரன் அவர்கள் மற்றும் பல நெசவுத் தொழிலாளர்களும் வரவேற்று உபசரித்தார்கள். மாலை 6-மணிக்கு தொழிலாளர் சங்கத்தில் ஷை விசாரணைக் கோர்ட்டாரால் நெசவுத் தொழிலாளர் நிலைமைகளைப்பற்றி விசாரணை நடைபெற்றது.

அது சமயம் விசாரணைக் கோர்ட்டு 19 கேள்விகளுக்கு பதிலைக் கொண்ட மகஜரை நெசவுத் தொழிலாளர் சங்கச் சார்பில் ஷை பிரிதிநிதியிடம் காரியதரிசி S. M. திருவுடையான் அவர்கள் சமர்ப்பித்தார்.

அதில் கைத்தரி நெசவாளர்களுக்கு தற்சமயம் கொடுத்துவரும் நூல்வினியோகம் திருப்திகரமாக இல்லையென்றும் இதனல் நெசவாளர்கள் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்றும் ஆகவே கைத்தரி நெசவாளர்களுக்கு போதிய நூலும் உணவுப் பொருள்களின் விலைவாசிக்கு தகுந்த கூலியும் கொடுக்க வேண்டுமென்றும், முதலாளிகளின் கொள்ளை லாபத்தையும் சுரண்டலையும் சர்க்கார் தடைசெய்யவேண்டுமென்றும் புதிய இயந்திர நெசவுகளுக்கு கொடுக்கும் கோட்டா நூலை கைத்தரி நெசவாளர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும், நெசவாளர்களுக்கு பில்டிங் சொஸைடி வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி வீடுகள் கட்டிக் கொடுக்கவும், நெசவாளர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யுத்தகாலத்திற்கு முந்திய விலைவிகிதம் கிடைக்கும்படி சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், நெசவாளர் வசிக்கும்பகுதிகளில்சிற்றுண்டிகள் குறைந்த விலையில் கிடைக்கும்படியான ஏற்பாட்டை சர்க்கார் செய்ய வேண்டுமென்றும், சங்கரன்கோவில் ஏரியாவில் நூல் ரேஷன் கார்டு இல்லாமல் அவதிப்படும் ஏழைக் குடும்பங்களுக்கு நூல் ரேஷன் கார்டு கொடுக்க வேண்டுமென்றும், சங்கரன்கோவில் ஏரியா தரிகாரர்களுக்கு தற்சமயம் மாஸ்டர் வீவர் கொடுத்துவரும் கூலி மிக குறைவாய் இருப்பதால் நெசவாளர்களுக்கு போதிய கூலியும், போனசும், பிரசவ சகாய உதவியும் கொடுக்க வேண்டுமென்றும் மகஜரில் கோரப்பட்டிருந்தது. விசாரணைக் கோர்ட் பிரதிநிதி தொழிலாளர்கள் முன்னேறுவதற்கு வேண்டிய ஏர்பாடுகளை செய்யத் தயாராய் இருப்பதாகவும் கூறினர்.

நிதி திரட்ட நேர்மையை இழப்பதா?

கம்யூனிஸ்டு தோழர்களின் சிந்தனைக்கு

காங்கிரஸ், முஸ்லீம்லீக், இந்து மகாசபை, தொழிலாளர் சங்கங்கள் தாழ்த்தப்பட்டோர் சங்கம், திராவிடர் கழகம் முதற்கொண்டு மற்றுமுள்ள எல்லா பொது ஸ்தாபனங்களும் தங்கள் நோக்கங்கள் வெற்றிபெற, ஆவன செய்ய நிதி திரட்டுவதென்பது இன்றியமையாததாகும்.

மேற்சொன்ன இயக்கத் தவர்கள் பொதுமக்களிடத்திலே நிதி திரட்டும் போது ஒருவரோடொருவர் எதிர்த்து நின்றோ மற்றவர்களைக் குறை கூறியோ பேசினார்களில்லை. வேண்டுமானால் தங்கள் நோக்கங்களைப்பற்றி அதிகமாகப் பெருமை படுத்தி கூறியிருக்கலாம்.

தவிர இவ்வியக்கத்தவர்கள் பொதுமக்களிடையேயிருந்து வசூலித்த நிதி செலவிடப்பட்ட விவரத்தைப் பற்றி தவறிருப்பின் கண்டிக்கவோ, திருத்தவோ அனைவருக்கும் உரிமையுண்டு.

இக்காரணம் பற்றியே, திலகர்நிதி, முதல் தீண்டாமை நிதி வரை என்ன ஆயிற்று என்றுநம் நாட்டில்கேள்வியும் கேட்கப்பட்டதுண்டு.

நிற்க, சில காலமாக நம் நாட்டிலுள்ள பொதுவுடமைக் கட்சியினர் என்று கூறிக் கொள்பவர்கள் தங்களின் கட்சியின் நோக்கம் வெற்றிபெற, தாங்கள் நடத்தும் வாரத்தாளை தினசரியாக்க பொதுமக்களிடையே குறிப்பாகத் தொழிலாளரிடத்தே நிதி வசூலிப்பதாகத் தெரிகிறது. இதை எவரும் தவறு என்றோ, அல்லது நிதி கூடாது என்றோ கூறவும், கருதவும் முடியாது. மக்களை மாக்களாக்குகிற பல மூடப் பழக்க வழக்கத்துக்கெல்லாம் பொருளை கொள்ளை கொடுத்து மேலும் அடிமைகளாய் இருக்கவழி தேடுவதை விட, இவ்வித பொதுக் காரியங்களுக்காக மக்கள் உதவவேண்டுவது முக்கிய கடமையுமாகும்.

ஆனால், பொதுவுடமைக்காரர் எனப்படுவோரின் நிதி திரட்டும் போக்கு மற்ற கட்சியினரைவிட அலாதியாகவும் விஷமத்தனமும், நன்றி கெட்டதுமான செய்கைகள் நிறைந்துள்ளன. இதற்கு சான்றாக பல இடங்களிலிருந்து தொழிலாளர் நண்பர்களும் திராவிடர் இயக்கத் தோழர்களும் ஆதாரங்களுடன் கடிதம் எழுதிவருகின்றனர்.

பொதுவுடமைக்காரர்கள் எனப்படுவோரின் பத்திரிகை தினசரியாக மாறிவிட்டால், திராவிடர்கழகத்தினர் வண்டவாளம் வெளிவந்து விடுமேயென்ற நடுக்கத்தில், திராவிடர் கழகத்தினர் அவர்களுக்கு நிதிகொடுக்காதீர்கள் என்று கூறுவதாக பொதுவுடமை "வெத்து வேட்டுத் தோழர்" பொன்மலை கூட்டத்தில் அபாண்டப் புளுகைக் கூறி அங்கலாய்த்துக் கொண்டாராம்.

ஜீவானந்தம் பேசுகிறார்!

தோழர். ப. ஜீவானந்தம் சில மாதங்களாக ஒரு புதிய தந்திரத்தை கையாண்டு வருகிறார்.

சென்னை, பொன்மலை மற்றும் தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டு கூட்டங்களில் பேசுகையில், திராவிடர் இயக்கத்தை அறிவுக் கொவ்வாத வகையில் தூற்றியுள்ளார்.

திராவிடர் இயக்கத்தவர்கள் கலந்து கொள்ளும் சர்வகட்சி கூட்டங்களில் திராவிடர் இயக்கத்தைப்பற்றி புகழ்ந்து பேசி வருகிறார்.

பொன்மலையிலும், சென்னையிலும் கடந்த வாரங்களில் கழகத்தைவீணாகத் தாக்கிப் பேசிய தோழர் ஜீவானந்தம் 27-10-47-ல் தளபதி அண்ணாதுரை அவர்கள் கலந்துகொண்ட இனாம் விவசாயக் குடிகள் மாநாட்டில் கழகத்தின் கொள்கையை வானமளாவப் புகழ்ந்து பேசியுள்ளார்.

பார்ப்பனீய கம்யூனிஸ்டு போர்வையில் இது ஒரு நவீன தத்துவம்போலும்!

அதுமட்டுமல்ல அந்த "வீரர்" திராவிடர் கழகத் தலைவர் முதல் அனைவரையும், மிக மிக மட்டரகமான மாடவில் தனது ஆவேசக் கூச்சலில் தாக்கிப்பேசியுள்ளார்.

அட்டாவதானங்கள், சதாவதானங்கள், பாவலர்கள், பண்டிதர்கள், பணமூட்டைகள், அரசியல் அடக்குமுறைகள், பார்ப்பனிய ஆதிக்கங்கள், பண்டாரசந்நிதிகள், இந்த பத்திரிகை முதல் இதிகாச புராணங்கள், முகத்தில் பிறந்ததாகக் கூறிக் கொள்பவர்களின் சாபங்கள், சலசலப்புகள், கெஞ்சுதல், கூத்தாடுதல், மயிலை சீமான்களின் மிரட்டல்கள், இனத்துரோகிகளான விபீஷணர்களின் செயல்கள், சங்கராச்சாரியார் முதல் சா கடையில் தொடர்புவைத்துள்ள பார்ப்பனோத்தமர்களின் வேதாந்தங்கள், திண்ணைப் பேச்சுக்கள், அரசியலாருக்கு காட்டிக் கொடுக்கும் தன்மைகள், மக்களிடத்து விஷமப் பிரசாரம் செய்து துவேஷத்தை உண்டாக்கும் ஈனத் தன்மைகள் ஆக இவ்வளவையும் இன்னும் இதில் எழுத முடியாத அளவில் கச்சை கட்டிக்கொண்டு தலைகீழாக நின்று தம்பட்ட மடித்துங் கூட, சுயமரியாதை உணர்ச்சி அல்லது திராவிடர் கழக வளர்ச்சியை அசைக்க முடியவில்லையென்றால் போயும் போயும் ஆரியத்துக்கும் அரசியலார் அடக்குமுறைக்கும் பயந்து, அடிபணிந்து கொள்கையையே விட்டுக் கொடுத்துவிட்ட, இன்னும் கூற வேண்டுமானால் அரசியலில் ஒரு சிறிது நேர்மையைக் கூட கடைப்பிடிக்காத, நன்றி கெட்ட சுயநலக் கூட்டத்தினரின் தினசரியைக் கண்டு அஞ்சுகிறார்களாம் திராவிடர் கழகத்தினர்.

தினசரி யென்ன, மணிக்கு ஒரு வெளியீடு வரட்டுமே மக்களின் மன்றமாகிய திராவிடர் கழகத்தை, அதன் கொள்கையை, வளர்ச்சியை, தொழிலாளர்கள் கழகக் கொள்கையில் கொண்டுவரும் ஆர்வத்தை, ஆதரவை இனி "பொதுவுடமை"-க் காரர்கள் என்று நம் நாட்டில் கூறிக்கொள்ளும் கூட்டத்தினர்மட்டுமல்ல, அவர்களுக்கு அபயம் தந்துள்ள ஆரியமும், அதற்கு மூலகாரணமாயுள்ள வட நாட்டு பாசிஸமுமே அவதாரம் எடுத்து ரஜகஜ துரகபதாதிகளுடன் வந்தாலும் திராவிடர் கழக கொள்கையை அழித்துவிடமுடியும் என்று கருதுவது அறிவற்ற செய்கைக்கே ஒப்பாகும்.

இத்தனைக்கும் பொன்மலை, மதுரை, சென்னை, முதலிய இடங்களில் நம் திராவிடர் கழகத்தை வீணாக வம்புக்கு

இழுத்து இழித்தன்மையில் பேசிவரும் அப்பிண்டம் தன்னை உருவாக்கியதே சுயமரியாதை இயக்கம் என்பதை மறந்து விட்டது. உருவாக்கிய காரணத்திற்காக ஒத்து ஊத வேண்டுமென்று கூறவில்லை, தவறிருப்பின் கூறட்டும். அதைவிடுத்து தொழிலாளர்களும், பொதுமக்களும் திராவிடர் கழகத்தை ஆதரிக்கின்றனரே என்ற பொறாமையினால் பார்ப்பனீயத்துக்கு அடிமையாகி பலவிதமாக பேசுவது நேர்மையல்ல என்பதற்காகவே இதை எழுத நேர்ந்தது.

தவிர அவ்வுருவம் பொன்மலை, கூட்டத்தில் பேசும்போது பொதுவுடமைக்காக முதன்முதல் பாடுபட்டது நமது மாவீரர் சிங்காரவேலர்தான் என்றும் பெரியார், அல்லவென்றும் கூறிற்றாம். இந்த யிடத்தில் இது பிரித்தாளும் சூழ்ச்சியை கையாளுகின்றது. சிங்காரவேலர் மட்டுமல்ல மறைந்த வீரர் சிதம்பரனாரின் தியாகத்தைப்பற்றியும் தலைவர் பெரியார் அவர்களே நாளது வரை பல யிடங்களில் பெருமைபடுத்தி பேசிவருகிறார். அவர் மட்டுமல்ல திராவிடர் கழகத்தோழர்கள், கூட்டங்கள். மாநாடுகளிலும், அவரைப்பற்றி நினையூட்டாத நாட்களில்லை. தொழிலாளர் உலகிற்கென்று தனியாக எடுத்துக் கொண்டால் அவரைவிட தியாகம் செய்தவர்கள் நம் நாட்டில் இல்லையென்று கூட கூறத்தயங்கோம். ஆனால் பொதுவுடமை பிரசாரம் என்ற பேரால் முதன்முதலில் அரசியலாரின் அடக்குமுறைக்கு ஆளானது தலைவர் பெரியார் ராமசாமி யென்பதை நாம் கூறத்தேவையில்லை, அரசியல் சரித்திரமே கூறும்.

இவ்வாறிருக்க ஏன் அந்த உருவம் இப்படி குளறுபடி செய்து கூட்டத்தில் முறணாக பேசுகிறதென்றால் பார்ப்பனீயத்துக்கும் வடநாட்டு ஆதிக்கத்துக்கும் பக்க மேளம் வாசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதால், பார்ப்பனீயத்துக்குச் சொந்தமான பிரித்தாளும், சூழ்ச்சியை புகுத்தி திராவிட கழகத்தாருக்குள் பிரிவை உண்டாக்கி விடலாம் அல்லது திராவிடர் கழகத்தைச்சார்ந்துள்ள தொழிலாளர் மனதில் குழப்பத்தை உண்டு பண்ணலாம் என்ற தந்திரத்தில் அன்றி வேறில்லை. 1947-ம்ஆண்டில், பொதுமக்கள் அரசியல் அறிவு பெற்றுவரும் இன்றைய நிலையில் ஒரு காலத்தில் உண்மை வீரனாகமட்டுமல்ல, உழைப்பாளியாகவும் விளங்கிய அந்த உருவம், இன்று "கம்யூனிஸ்டு"கள் என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனீயத்துக்கு அடிமைப்பட்ட காரணத்தினால் அரசியல் பிற்போக்காளராக விளங்குவதைக்கண்டு உள்ளபடியே வருந்த வேண்டியிருக்கிறது.

இன்று பாசாங்கு செய்து பரிந்து பேசும் நம் நாட்டு பொதுவுடமைத் தலைவர்கள் எனப்படுவோர் நமது சிங்காரவேலருக்கு அவரது நினைவுக்கு என்ன செய்தார்கள் என்பதை நாடு மறந்து விட்டதா? அவர்களால் நடத்தப்பட்ட கண்காட்சிகளில் வடநாட்டுத் தலைவர்களின் உருவங்கள் இருந்தன, ஆனால் நமது சிங்காரவேலரின் சிறிய சின்னங்கூட அங்கு இல்லை. அதுமட்டுமா, அவர்களின் பிரசுரங்களில் வெளியீடுகளில் சிங்காரவேலர் இயற்றிய சிறிய புத்தகமாவது வெளியிடப்படுகிறதா, எல்லாம் வடநாட்டுக்காரர்களுடையதும் பார்ப்பனர்களுடையதும். இன்னும் அவர்கள் கூட்டங்களிலாவது (அந்த உருவம் தவிர) மற்ற பார்ப்பன கம்யூனிஸ்டுகள் எனப்படுவோர் நமது சிங்காரவேலரைப் பற்றி மக்களின் சிந்தனைக்குக் கொண்டுவருகின்றனரா?

ஆனால் உண்மையிலேயே நமது மாவீரர், சிந்தனை சிற்பி சிங்காரவேலரின் எழுத்தோவியங்களை பாட்டாளி உலகிற்கு பரவச் செய்வது ஈரோடு குடிஅரசு பதிப்பகந்தான். அவரின் வீரக் கொள்கையை நாட்டில் விளங்கச் செய்வது தன்மான இயக்கந்தான் என்பதை நன்றியுடையஎவரும் மறுக்க முடியாது.

இத்தனைக்கும், சிங்காரவேலர் அவர்கள் மறையுந்தருவாயில் ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களை (லைப்ரரியை) இந்த பொதுவுடமைகாரர்கள் என்று கூறிக்கொள்பவரிடத்தே ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளார், என்பதையும் நேயர்கள் அறியவேண்டுகிறோம்.

மேலும், அந்த உருவம், பொன்மலை கூட்டத்தில் பேசுகையில் சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்கு அந்நாளில் பலவித தொல்லைகளை ஏற்று பணி புரிந்தவரும், விடுதலை ஆசிரியருமான தோழர். எஸ். குருசாமி, பி. ஏ., அவர்களைப்பற்றியும் கண்டவாறு பேசிற்றாம்.

திராவிடர் இயக்க தினசரியான "விடுதலை"யின் தலைப்புகள், ஆரியத்தின் ஆணவத்தை அழித்தொழித்து வருவதுடன், நாட்டில் நல்லுணர்ச்சியை உண்டாக்கும் வகையில் வெளிவரும் தலைவர்களின் பேச்சுக்கள், உழைப்பவரின் உள்ளத்தின் கொந்தளிப்பை உள்ளபடியே எடுத்துக் காட்டி உலுத்தர்களின் உல்லாச வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து, நம் நாட்டை உண்மை தொழிலரசு நாடாக ஆக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டுவருதல் ஆகியவைகளுக்கு, கம்யூனிஸ்டு போர்வையைப்போர்த்துள்ள இந்நாட்டு பார்ப்பனீயத்தின், கோபல்ஸ் கப்ளான்ஸ்களாக விளங்கும் இந்த உருவங்களிடமிருந்து 'நல்வாக்கு நீ கொடடி' என்று எதிர்பார்க்க முடியாதல்லவா? எனவேதான் நமது தோழர் எஸ். குருசாமி அவர்கள்மீது சீறிவிழுந்து சீற்றம் கொள்கிறது பார்ப்பனீயத்தால் ஏவிவிடப்பட்டுள்ள அந்த "உருவம்"

திராவிடர் கழகநிதியைப் பொறுத்தவரை கூறிக் கொள்ள வேண்டுமானால் யாரையும் கட்டாயப் படுத்தியதுங்கிடையாது. இன்னுங்கூறுவோம் சேலம் மாநாட்டுத் தீர்மானத்திற்கு மாறாக சென்றுவிட்ட சாதாரண நண்பர்களிலிருந்து பணவசதி படைத்த இரண்டொருவரிடமும் கழகத்தினர் சென்றதுமில்லை, அவர்கள் வலிய வந்து கொடுத்துங்கூட, அதை ஏற்றுக் கொள்ளவுமில்லை.

கம்யூனிஸ்டு தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களோ, அவர்களிடத்து சேர்ந்துள்ள தொழிலாளர் சங்கங்களிலுள்ள தோழர்களிடம் தலா 5 ரூபாய் கட்டாயப்படுத்தி வாங்குவதாகத் தெரியவருகிறது. என்றாலும் நாம் இதைத் தவறு என்று கூறியதுமில்லை, திராவிடர் கழகத்தார் இவர்களுக்கு நிதி கொடுக்காதீர்கள் என்று இன்றுவரை கூறியதாக எவரும் சொல்ல முடியாது சுருங்கக் கூறின் அதைப்பற்றிக் கவலைப்பட்டதே கிடையாது.

இன்னுங்கூறுவோம் நம் நாட்டு கம்யூனிஸ்டு தலைவர்கள் எனப்படுவோர் காங்கிரசின் அடி உதை அடக்குமுறைக்கு ஆளாகி, பயந்து ஓடி வந்தபோது உதவி செய்தவர்கள் திராவிடர்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்களேயன்றி வேறில்லை. உள்ளபடியே நேர்மை இருக்குமானால் மேற்கண்ட உதவியால் உயிர்தப்பியவர்கள் பதிலுக்கு நன்றி காட்ட முடியாவிட்டாலும், விஷமப் பிரசாரம் செய்யாமலாவதிருக்கலாம்.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

1—ஆம் பக்கம் தொடர்ச்சி

என்ற நிலையில் யார் பலன் அனுபவித்து வருகின்றனர் என்பதை.

சாதாரணமாக இன்று மக்களிடையே தோன்றியுள்ள உணர்ச்சிக்கேற்ப பாடுபட்டுழைக்காதார் அவர் யாராயினும், எந்த ஜாதி, மதம், கட்சியினராயிருப்பினும் சரியே அவர்கள் வாழ்க்கையில் கொழுக்கவும், உழைக்கும் ஏழை மக்கள் கால் வயிற்று கஞ்சிக்கே தவிப்பாய்த் தவிக்கும் நிலை இனி நாட்டிலே நிலைக்காது என்ற கொள்கை வேரூன்றி விட்டது.

அதற்கேற்ப ஜமீன்தாரிஸத்தையும் அதற்கு முட்டுக்கொடுத்து நிற்கும் இனாம்தாரிசத்தையும் சேர்த்து ஒழிக்க வேண்டுமென்பதில் சென்னை மாகாண மக்களிடையே பெருத்த ஆதரவிருந்து வருகிறது.

இதை அனுசரித்தும், மக்களின் எழுச்சிக்கு கடமைப்பட்டும், தன்மான உணர்ச்சி கொண்டுமுள்ள சட்டசபை உறுப்பினர் பெரும்பாலோர் தங்கள் கட்சி கூட்டத்தில் ஆதரவைக் கொடுத்தனர்.

அதற்கேற்ப, ஜமீன்தாரிசத்துடன், இனாம் மானியமும் ஒழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் மெஜாரிட்டி ஓட்டுகளால் நிறைவேறிற்று.

இதற்கு முன்பெல்லாம் நம்நாட்டு அரசியலில், பல சந்தர்ப்பங்களில், இவ்வித தீர்மானங்கள் நிறைவேறும்போது ஒரு ஓட்டு அதிகப்படியாயிருந்தாலும் அது வெற்றி என்றே முரசு கொட்டப்பட்டது. அதுதான் நியாயமும், ஜனநாயக முறைக்கு ஏற்றதுமாகும்.

இனாம் மானியம் ஒழிப்பில் காங்கிரஸ் உறுப்பினர் கூட்டத்தில் கிடைத்தது ஐந்து அதிகப்படியான ஓட்டுகள். என்றாலும் இந்த மெஜாரட்டி போதாதென்று "இனாம் வக்காலத்துகள்" மீண்டும் உரத்த குரலில் ஓயாது சத்தம்போட்டனர், அந்த கூப்பாடு டெல்லி வரை கேட்கும்படி.

சிறு பிள்ளைகள் "கோலி ஆட்டம்" விளையாடுகையில் தோல்வியுற்றவன் "அம்பேல்" தனம் செய்வதுபோன்று மெஜாரிட்டி ஓட்டுகள் மிகக்குறைவு என்ற அர்த்தமில்லாது, அறிவுக்கும், நியாயத்துக்கும், நேர்மைக்கும் முரணான முகாரி ராகத்தை வைத்து ஒப்பாரியிட்டு, ராஜிநாமா படலங்கள்முதல் ராஜாஜியிடம் முறையீடுகள் வரை நடத்தினர்.

இவர்களின் கூப்பாடு டெல்லிவரை எட்டும்படி எட்டையாபுர விழாவுக்கு வந்த ஆச்சாரியாரும் அனுக்கிரகம் செய்தாராம்.

தங்களின் ஏகபோக மிராசுக்கு தரகர் போன்றிருந்ததைவிட வேறு எந்த உரிமையும், பயனுமில்லா "இனாம்"களுக்கு இவ்வளவு சிபார்சுகள் இருக்கும்போது நாம்மட்டும் ஏன் நமதுபேராசையை விட்டுவிட வேண்டும். தூங்கினவன் துடையில் திரித்தவரை லாபம் என்றதையொட்டி ஜமீன்தாரிசமும் நஷ்டஈடு தொகை போதாதென்று மீண்டும் தங்கள் வெறியாட்டத்தைத் துவக்கின.

அன்றொருநாள், பாஷியம் அய்யங்கார்மீது பிரம்பு அடிபட்டது (தற்செயலாக) பற்றி பாராளுமன்றம் வரை பிரமாதப்பட்டதல்லவா? அதேபோன்று இனாம்மானியம் ஜமீன் ஒழிப்பில் சேர வேண்டும் என்று காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் கூட்டத்திலே மெஜாரிட்டியாக நிறைவேறியும், அதை மதிக்காது, எதிர்த்து ராஜிநாமா செய்த வைத்தியநாதன்களின் "தேச பக்த" செய்கை டெல்லியிலுள்ள பாசிஸ கூட்டத்தினர் காதில் பாய்ந்தது.

உடனடியாக நம் மாகாண மந்திரிகள் அதற்கேற்ப காவடி தூக்கிகளாக மாறி கிருபைசெய்து அருளுமய்யா கிருபளானியே என்று வடநாடு நோக்கிச் சென்றனர்.

மந்திரிகள் மட்டுமல்ல, ஜமீன்தாரிச சார்பாக ஒரு காவடி; இனாம்தாரிச சார்பாக மற்றொரு காவடி ஆக நம் மாகாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்றன, இத்தனை காவடிகளும்.

எதற்காக இவ்வளவும், நண்பர்களே! அருமை காங்கிரஸ் திராவிடர்களே, ஏனைய கட்சியினரே, தொழிலாளர்களே சிந்தித்துப் பாருங்கள், நம் நாட்டில் காங்கிரஸ் பேரால் ஆட்சி முறை துவக்கப்பட்டு, அதாவது கட்டாய இந்தி போராட்டத்திலிருந்து, இன்றுவரை எவ்வளவோ நெருக்கடிகள் ஏற்பட்டன, குறிப்பாக சமீப காலத்தில், தொழிலாளர் வேலை நிறுத்தங்களின் காரணமாக தடியடியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம், சிறை தண்டனை, மற்றும் பெருங் கலவரங்கள் எல்லாம் உண்டாகி பாடுபட்டுழைக்கும் பாட்டாளி மக்கள் அல்லல்பட்டனர்; இவ்வித சந்தர்ப்பங்களில் டெல்லி தலைவர்களோ, அல்லது இம்மாகாண ஆளவந்தார்களோ, அல்லது இனாம்தாரிகளுக்காக ஓலமிடும் சுயநலக் கூட்டமோ வடநாடு நோக்கி சென்று ஆவன செய்யமுன் வந்தார்களில்லை. ஏழைத் தொழிலாளருக்கு இவ்வித கைவிரிப்பு. இத்தனைக்கும் அவர்களின் கூப்பாடு நியாயத்தையும், உரிமையையும் அடிப்படையாகக் கொண்டிருந்துங்கூட இக்கதி.

ஆனால் நாட்டின் முற்போக்குக்கே முட்டுக்கட்டையாயுள்ள வர்ணாஸ்ரமத்தையும், மதவெறியையும் மக்களிடையே உண்டாக்குவதற்கு அஸ்திவாரமாயுள்ள இனாம்தாரிசத்தை விலக்க வேண்டுமென்றால் அதற்காக பார்ப்பனப்பத்திரிகைகள், அத்தலைவர்களிலிருந்து வாலர்கள் வரை எதிர்ப்பு. போதாக் குறைக்கு வட நாட்டுக்குக் காவடி.

அதையுங் கூட அனுமதிப்பதாகவும் வைத்துக் கொள்வோம். இந்த இனாம்களின் எதிர்ப்புக்காக அஞ்சி காவடி தூக்கிச் சென்றதின் போக்கு என்ன ஆயிற்று? பிள்ளையார் பிடிக்க குரங்காய் மாறியது என்பார்களே அதைப்போன்று "ஜமீன்தாரிகளுக்கு ஏற்கெனவே கொடுப்பதாயிருந்த நஷ்டஈடு 10 கோடி ரூபாய் போதாதென்றும், மேலும் சேர்த்துத் தர வேண்டுமென்றும், அதேபோன்று இனாம் மானியங்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும்" வட நாட்டுச் சர்வாதிகாரிகள் அபயம் அளித்து விட்டது மட்டுமின்றி மெஜாரிட்டியால் நிறைவேறிய தீர்மானத்தை மீண்டும் புனராலோசனை செய்யவும் சிபார்சு செய்துள்ளனராம்.

சென்னை மாகாண வாசிகளே, காங்கிரஸ் திராவிடர்களே கருணை கூர்ந்து கட்சி வேற்றுமையை விட்டு கவனிக்க வேண்டுகிறேன்.

ஏற்கனவே ஜமீன்தாரிகளுக்குக் கொடுக்க இருக்கும் நஷ்ட ஈடுத்தொகையாகிய 10 கோடி ரூபாய் அதிகமென்று எல்லா தோழர்களும் எடுத்துரைத்திருந்தும், வட நாட்டு "தரித்திர நாராயணன்கள்" அதை அதிகமாக்கியிருக்கிறார்கள் என்றால் இது சர்வாதிகாரமா? ஜனநாயகமா அல்லது நம் நாட்டு பிரச்சனையில் நமக்கிருக்கும் உரிமையை பறிப்பதா என்பதை சிந்திக்க வேண்டுகிறேன். ஜமீன்தாரிகள் நஷ்ட ஈட்டை அதிகமாக்கியதின் சூழ்ச்சி என்ன?

(7—ம் பக்கம் பார்க்க)

Edited and Published by N. V, Natarajan, at Dravidan Office, 6, Sunkurama Chetty St., Madras and Printed by T. M. Parthasarathy, at Mercantile Press, No. 2/45, Muthumari Chetty St., Mannady. G. T. Madras.